வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின்(பொ) செயல்முறைகள்

ஓ.மு.எண்.4266/ஆ2/2025 நாள்:25.08.2025

பொருள்: பள்ளிக் கல்வி-வேலூர் மாவட்டம்-சைபர் கிரைம் குறித்த விழிப்புணர்வு-பள்ளி மாணவ/மாணவியர்களின் பெற்றோரிடம் கல்வி உதவித் தொகை தருவதாக கூறி ஏமாற்றி பணம் பறிப்பது-விழிப்புணர்வு சுற்றறிக்கை அனுப்புவது-தொடர்பாக.

பார்வை: வேலூர் மாவட்ட இணையவழி குற்றப்பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளரின் கடிதம். C.No.36-1/ADSP/CCW/2025 நாள்:21.08.2025.

-----

வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு/அரசு உதவி பெறும் உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களின் பெற்றோர்களுக்கு பள்ளி கல்வித்துறை மூலமாக அரசு அலுவலர்கள் பேசுவதாகவும், உயர்/மேல்நிலை வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை, குறிப்பிட்ட பள்ளியில் படிக்கும் மாணவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அதனை பெற்றுக் கொள்ள போன்பே (PhonePe) மூலமாக சிறிய தொகையை ரூ.2,000/- முதல் ரூ.5,000/- வரை உன் தொகையாக ஜிபே (GPay) அல்லது போன்பே மூலமாக பதிவு செய்து கட்ட வைத்து அல்லது கியூஆர் கோடு(QR Code) ஸ்கேன் செய்ய சொல்லி ஏமாற்றி பணம் பறிக்கும் நிகழ்வுகள் தற்போது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே உள்ளதாக பார்வையில் காணும் இணையதள குற்றப்பிரிவு கூடுதல் கண்காணிப்பாளரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது சம்பந்தமாக வேலூர் மாவட்ட சைபர் கிராம் காவல் நிலையத்தில் புகார் மனுக்கள் அதிகப்படியாக பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பொருள் குறித்து ஸ்காலர்ஷிப் (Scholarship) மோசடி மற்றும் சைபர் கிரைம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு **"சைபர் கிரைம் (Cyber Crime) விழிப்புணர்வு"** ஏற்படுத்தி மேலும் அவர்களின் பெற்றோர்களுக்கும் ஸ்காலர்ஷிப் என்ற பெயரில் நடைபெறும் ஏமாற்று வேளையில் செல்போன் மூலமாகவோ வாட்ஸப் (WhatsApp) மூலமாகவோ யாரேனும் தொடர்பு கொண்டு பள்ளிக்கல்வித்துறையில் இருந்து அரசு அதிகாரிகள் பேசுவதாக கூறி பணம் கேட்டால் ஏமார்ந்து விடாமல் சம்பந்தப்பட்ட பள்ளி ஆசிரியர்கள்/தலைமையாசிரியர்களிடம் கலந்து பேசி உண்மை தன்மையை உறுதி செய்து கொள்ள எடுத்துரைக்குமாறு தெரிவிக்கலாகிறது.

மேலும் பெற்றோர்கள் யாரேனும் ஸ்காலர்ஷிப் (Scholarship) மோசடியில் ஏமாந்து இருந்தால் அருகில் உள்ள காவல் நிலையத்திலோ அல்லது மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இயங்கும் சைபர் கிரைம் காவல் நிலையத்திலோ அல்லது 1930 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டோ அல்லது web://cybercrime.gov.in என்ற இணையதளம் மூலம் தொடர்பு கொண்டு புகார் அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ)
வேலூர்.

பெறுநர்

தலைமையாசிரியர்கள்
அனைத்து அரசு/அரசு உதவி பெறும் உயர்/மேல்நிலைப் பள்ளி
வேலூர் மாவட்டம்.

நகல்

1. மாவட்டக் கல்வி அலுவலர்
(இடைநிலை/ தொடக்கக் கல்வி/ தனியார் பள்ளிகள்)
மாவட்டக் கல்வி அலுவலகம்,
வேலூர்.
(தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பள்ளிகளுக்கு தகவல் தெரிவிக்கும் பொருட்டு அனுப்பப்படுகிறது)
2. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் இணைய வழி குற்றப்பிரிவு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.